### மீஞ்சூர் அருகே சரித்திர குற்றவாளியை பிடிக்கச் சென்ற

# உதவி ஆய்வாளர் தலையில் கொடூர அரிவாள் வெட்டு!

## குற்றவாளிகள் தப்பியோட்டம்! அரிவாளுக்கு முன் சரணடைந்த த.வெ.க. ஆட்சியின் சட்டம்–ஒழுங்கு!

திருவள்ளூர், ஜூலை 21-

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலை தொடர்ந்து சீர்குலைந்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வரும் நிலையில், தற்போது சட்டத்தை நிலைநாட்டச் சென்ற காவல்துறை அதிகாரியே அரிவாளால் வெட்டப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குற்றவாளிகளை கைது செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த உதவி ஆய்வாளர் தலையில் பலத்த வெட்டுக்காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம், காவல் துறையினர் மத்தியிலும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை வில்லிவாக்கம் காவல் நிலையத்தின் சரித்திர பதிவேடு குற்றவாளியான பூபாலன், திருவள்ளூர் மாவட்டம் அத்திப்பட்டு பகுதியில் பதுங்கியிருப்பதாக சென்னை போதைப்பொருள் தடுப்பு பிரிவு (ANIU) போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து செல்போன் சிக்னல் உள்ளிட்ட தொழில்நுட்ப ஆதாரங்களை பயன்படுத்தி அவரை கைது செய்ய தனிப்படை போலீசார் விரைந்தனர்.

போதைப்பொருள் தடுப்பு பிரிவு உதவி ஆய்வாளர் வெங்கடேஷ் மற்றும் மற்றொரு காவலர், பூபாலன் பதுங்கியிருந்ததாகக் கூறப்படும் வீட்டிற்குள் சென்று கைது செய்ய முயன்றனர். அப்போது முன்கூட்டியே திட்டமிட்டு பதுங்கியிருந்த பூபாலன் மற்றும் அவரது கூட்டாளிகள், திடீரென அரிவாள்களுடன் போலீசாரை நோக்கி தாக்குதல் நடத்தினர்.

இந்த கொடூர தாக்குதலில் உதவி ஆய்வாளர் வெங்கடேஷின் தலையில் பலத்த வெட்டுக்காயம் ஏற்பட்டது. ரத்த வெள்ளத்தில் சரிந்த அவரை உடனடியாக சக போலீசார் மீட்டு மீஞ்சூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக அனுமதித்தனர். தாக்குதல் நடத்திய கும்பல் சம்பவ இடத்திலிருந்து கணநேரத்தில் தப்பிச் சென்றது.

இந்த சம்பவம் குறித்து தகவல் கிடைத்தவுடன் செங்குன்றம் துணை ஆணையர் மகேஸ்வரி தலைமையில் மூத்த காவல் துறை அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று ஆய்வு மேற்கொண்டனர். அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்களின் காட்சிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

முதற்கட்ட விசாரணையில், சரித்திர பதிவேடு குற்றவாளியான பூபாலன் அண்மையில் அத்திப்பட்டு பகுதியில் வாடகை வீடு எடுத்து பதுங்கியிருந்தது தெரியவந்துள்ளது. அவர் மற்றும் அவரது கூட்டாளிகள் எந்த வழியாக தப்பிச் சென்றனர் என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிகிச்சை பெற்று திரும்பிய உதவி ஆய்வாளர் வெங்கடேஷ், மீஞ்சூர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில், கொலை முயற்சி, அரசு ஊழியரை பணி செய்ய விடாமல் தாக்குதல், ஆபத்தான ஆயுதங்களால் கொடுங்காயம் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு தனிப்படைகள் அமைக்கப்பட்டு குற்றவாளிகளை கைது செய்ய தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

சட்டத்தை காக்கும் காவல்துறையினரே குற்றவாளிகளின் அரிவாளுக்கு இலக்காகும் நிலை ஏற்பட்டிருப்பது, மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கு குறித்து கடும் கேள்விகளை எழுப்பியுள்ளது. காவல்துறையினர் உயிரைப் பணயம் வைத்து குற்றவாளிகளை பிடிக்கச் செல்லும் சூழலில் கூட அவர்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லையா என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

“சட்டத்தை அமல்படுத்தும் காவல்துறையினருக்கே பாதுகாப்பு அளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தால், சாதாரண பொது மக்களின் பாதுகாப்பு எந்த நிலையில் இருக்கும் என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிறது. சரித்திர பதிவேடு குற்றவாளிகள் போலீசாரையே அரிவாளால் தாக்கிவிட்டு தப்பிச் செல்லும் அளவுக்கு துணிச்சல் பெற்றிருப்பது, மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பொது மக்கள் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குற்றவாளிகளுக்கு அச்சமில்லாத சூழல் உருவாகியுள்ளது என்றும், சட்டத்தின் மீதான மரியாதையை மீட்டெடுக்க அரசு உடனடியாக உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

### காற்று மாசு ஏற்பட்டு சுவாசக் கோளாறால் பலர் உயிரிழப்பு!

# எத்தனால் உற்பத்தி ஆலையால் சுற்றுச்சூழல் பாதிப்பு!

## அந்தியூரில் அமைச்சர்களின் கார் முன்பு மக்கள் மறியல் போராட்டம்!

பவானி, ஜூலை 21-

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தி வரும் எத்தனால் உற்பத்தி ஆலையை தடை செய்ய கோரி அமைச்சர்களின் கரை வழிமறித்து கிராம மக்கள் போராட்டம் நடத்தினர். பவானி, அந்தியூர் தொகுதியில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைக்க, வருவாய்த்துறை அமைச்சர் செங்கோட்டையன், கைத்தறி துறை அமைச்சர் விஜய் பாலாஜி, எம்.எல்.ஏ. ஆனந்த் மோகன், கலெக்டர் கந்தசாமி ஆகியோர் நேற்று காலை அம்மாபேட்டை வந்திருந்தனர். இதனை அறிந்த பூனாச்சி, ராமச்சந்திராபுரம் பகுதியைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பொதுமக்கள், நத்தமேடு பிரிவில் தனியார் மரவள்ளிக்கிழங்கு, எத்தனால் உற்பத்தி ஆலையின் முன்பாக அமர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அப்போது அவ்வழியே காரில் வந்த அமைச்சர் செங்கோட்டையன், விஜய் பாலாஜி ஆகியோரை வழிமறித்து அமர்ந்தனர். அமைச்சர்களிடம், தனியார் ஆலை வெளியேற்றும் கழிவு நீரால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, பொதுமக்கள் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆழ்குழாய் தண்ணீர் மாசடைந்து விட்டது. ஓடையில் கழிவுநீர் கலக்கிறது. காற்று மாசடைந்து துர்நாற்றம் வீசுவதால் சுவாசக்கோளாறு ஏற்பட்டு பலர் உயிரிழந்துள்ளனர்.

சரும நோய்களால் சிறியவர் முதல் பெரியவர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து, பலமுறை புகார் தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்விவகாரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரி விடுத்தனர். இதனை தொடர்ந்து அமைச்சர்கள் செங்கோட்டையன், விஜய் பாலாஜி ஆகியோர் மறியலில் ஈடுபட்டோரிடம் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இது குறித்து, முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர்.

இதனால், பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இப்போராட்டத்தால் சுமார் ஒரு மணி நேரம் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

### தமிழ்நாடு முழுவதும் 800 பேரிடம்

# அரசு வேலை வாங்கித் தருவதாக கோடிக்கணக்கில் மோசடி!

## திருப்பூரில் பாதிக்கப்பட்டவர்கள் முற்றுகைப் போராட்டம்!

திருப்பூர், ஜூலை 21-

திருப்பூர் செட்டிபாளையம் பகுதியை சேர்ந்தவர் நாகேந்திரகுமார். இவர் டெல்லியைச் சேர்ந்த பிரகாஷ் என்பவருடன் இணைந்து நீதிமன்றம் மற்றும் அரசு அலுவலகங்களில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி தமிழ்நாடு முழுவதும் பலரிடமும் கல்வித் தகுதிக்கு ஏற்ப வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஒவ்வொரு நபரிடமும் ரூ.7 லட்சம் முதல் ரூ.9 லட்சம் வரை பெற்றுள்ளார்.

அவர்களுக்கு சந்தேகம் வராத வகையில், நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் அரசு வேலை தொடர்பான பயிற்சி வழங்கி, அவர்களுக்கு மாதந்தோறும் குறிப்பிட்ட தொகையை ஊதியமாக கொடுத்து நம்ப வைத்துள்ளனர்.

தொடர்ந்து சான்றிதழ் சரிபார்ப்பு உள்ளிட்ட பணிகளையும் மேற்கொண்டுள்ளனர். போலி பணி நியமன ஆணைகளையும் வழங்கியுள்ளனர். பணி நியமன ஆணை பெற்றவர்கள் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு சென்றபோதுதான், அது போலியான பணி நியமன ஆணை என்பது தெரியவந்தது.

இதனால் மோசடியால் பாதிக்கப்பட்டவர்கள் செட்டிபாளையம் பகுதியில் உள்ள நாகேந்திரகுமாரின் வீட்டை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவலறிந்து வந்த போலீசார் அவர்களிடம் புகார் அளிக்குமாறு தெரிவித்தனர்.

திருப்பூர் மட்டுமின்றி தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், தேனி உள்ளிட்ட மாநிலம் முழுவதும் 800க்கும் மேற்பட்டவர்களிடம் கோடிக்கணக்கில் மோசடியில் ஈடுபட்டிருப்பது தெரியவந்துள்ளது. இது தொடர்பாகப் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. வெற்றி பெற்றதற்கான நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம் கோவில்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் – முன்னாள் அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன், சூர்யா வெற்றிகொண்டான் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். ஒன்றிய செயலாளர்கள் ஆ.சின்னப்பாண்டியன், அ.சுப்பிரமணியன், பி.முருகேசன், பி.ராதாகிருஷ்ணன், கே.கருப்பசாமி, கு.ஜெயக்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர செயலாளர் சுரேஷ் வரவேற்புரை ஆற்றினார். கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.ராமர், பீட்டர், சிவசுப்பிரமணியன் , ஏஞ்சலா, ஒன்றிய செயலாளர்கள் நவநீத கண்ணன், மும்மூர்த்தி, செல்வராஜ் அன்புராஜன், ராமசுப்பு, ஆர்.ராதாகிருஷ்ணன், சின்னமாரிமுத்து, காசி விஸ்வநாதன், இம்மானுவேல், சுரேஷ் கண்ணன், கிருஷ்ணகுமார், பாலகுமார், பாரதி கணேசன், வேலுச்சாமி, கு.தவமணி, இரா.மணி, சந்தானம், மோகன், க.சந்திரசேகர், நா.விஸ்வநாதராஜா மற்றும் எஸ்.வி.எஸ்.பி.மாணிக்கராஜா, எஸ்.வி.எஸ்.பி.நாகராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., திராவிட இயக்கத்தின் மீது பற்றுகொண்ட இளம் தலைமுறை சிந்தனையாளர்களை சந்தித்து உரையாடினார்.

### மாற்றுத் திறனாளிகள் நலத்துறையை கவனிக்கும் அருகதையை முதல்வர் விஜய் இழந்து விட்டார்!

# மாற்றுத் திறனாளி சபரிவர்மன் படுகொலை - முதல்வர் விஜய் கள்ள மவுனம்!

## கழக மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என். தீபக் கண்டனம்!



சென்னை, ஜூலை 21-

மாற்றுத்திறனாளி சபரிவர்மன் படுகொலைக்கு வாய் திறக்காமல் முதல்வர் விஜய் தனது கள்ள மவுனத்தினால் மாற்றுத்திறனாளிகளின் கடும் அதிருப்திக்கு உள்ளாகி இருக்கிறார். மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை கவனிக்கும் அருகதையை முதல்வர் விஜய் இழந்து விட்டார் என - கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என். தீபக் கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அவர் பேசியதாவது:

ஒரு போராட்டத்தை அறிவிக்க வேண்டும் என்று கூறிய சில மணி நேரங்களிலேயே, எங்களின் குரலாக இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்து தந்த மாவட்டச் செயலாளர் அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு, தமிழகம் முழுவதும் வாழும் மாற்றுத்திறனாளிகளின் சார்பாக எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

“எங்களுக்காக யார் பேசுவார்கள்? எங்கள் வலியை யார் புரிந்து கொள்வார்கள்?” என்ற ஏக்கத்தோடு வாழும் ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகளின் இதயத்திலிருந்து எழும் நன்றிதான் இது. எங்களது கண்ணீருக்கும், வலிக்கும், உரிமைக்கும் மதிப்பளித்து இன்று எங்களுடன் நிற்கும் உங்களுக்கு எங்கள் நன்றிகள் என்றும் உரித்தானவை.

அதேபோல், “எனக்கு நேரமில்லை” என்று சொல்லாமல், “நான் வருகிறேன்” என்று உடனடியாக ஒப்புக்கொண்டு இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக வந்த நமது நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கலாநிதி வீராசாமி அவர்களுக்கும் மாற்றுத்திறனாளிகளின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புத் தோழர்களே,

சபரிவர்மன் என்ற மாற்றுத்திறனாளி அடித்துக் கொல்லப்பட்டார் என்ற செய்தி எங்களுக்கு ஒரு சாதாரண செய்தி அல்ல. அது எங்கள் ஒவ்வொருவரின் இதயத்தையும் உலுக்கிய பேரதிர்ச்சி. இன்று சபரிவர்மன்; நாளை நம்மில் யாராவது என்ற அச்சத்தை உருவாக்கிய சம்பவம் அது.

இந்த ஆர்ப்பாட்டம் ஒரே ஒரு மனிதருக்கான நீதி கேட்கும் போராட்டம் மட்டுமல்ல. இனி எந்த மாற்றுத்திறனாளிக்கும் அநீதி நடந்தாலும் அதை எதிர்த்து குரல் கொடுக்க ஒரு சக்தி இருக்கிறது என்பதை இந்த சமூகத்திற்கும், அரசுக்கும், அதிகார அமைப்புகளுக்கும் உணர்த்தும் வரலாற்றுப் போராட்டம்.

**மனித நேயத்தின் எழுச்சி!**

இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கென தனி அணியை உருவாக்கி, அரசியல் உரிமையையும் மரியாதையையும் வழங்கிய வரலாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உரியது. அந்த அணியில் இருக்கும் நாங்கள், எங்கள் சகோதரர் ஒருவரின் உயிர் பறிக்கப்பட்ட போது அமைதியாக இருக்க முடியாது.

இன்று இங்கு நீலகிரியிலிருந்து, கடலூரிலிருந்து, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து, உடல் வலியையும், பயண சிரமங்களையும் பொருட்படுத்தாமல் ஏராளமான மாற்றுத்திறனாளிகள் ஒன்று கூடியுள்ளனர். இது ஒரு கூட்டமல்ல; இது மனிதநேயத்தின் எழுச்சி.

எங்களால் வேகமாக நடக்க முடியாமல் இருக்கலாம். சிலரால் பேச முடியாமல் இருக்கலாம். சிலரால் கேட்க முடியாமல் இருக்கலாம். ஆனால் எங்கள் மன உறுதியை எந்த ஊனமும் முடக்க முடியாது. எங்கள் உடலில் குறை இருக்கலாம்; எங்கள் உள்ளத்தில் குறை இல்லை. எங்கள் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம். அதுதான் இந்தக் கூட்டத்தின் உறுதியான நிலைப்பாடு.

அன்புடைய தோழர்களே,

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை எளிதானதல்ல. சாதாரண மனிதர்கள் இயல்பாகச் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலையும் செய்வதற்கு, நாங்கள் பல மடங்கு அதிகமான முயற்சி எடுக்க வேண்டியிருக்கிறது.

நானே கடந்த இரண்டு மாதங்களாக கடுமையான முதுகுவலியால் அவதிப்பட்டு வருகிறேன். இன்றும் இந்த மேடையில் நிற்பது எனக்கு வலியோடு கூடிய ஒன்றுதான். ஆனால், என் உடல் வலியை விட சபரிவர்மனின் மரண வலி பெரியது. ஒரு தாயின் கண்ணீரை விட என் வேதனை பெரியதல்ல. அதனால்தான் அந்த வலியை மறந்து இன்று உங்கள்முன் நிற்கிறேன்.

சபரிவர்மனின் தாய் என்ன நினைத்திருப்பார்? தன் மாற்றுத்திறனாளி மகனை உயிராக வளர்த்த அந்தத் தாயின் இதய வேதனையை எந்த வார்த்தைகளாலும் விவரிக்க முடியுமா? அவர் அடியடியாக தாக்கப்பட்டபோது, ஒருவேளை அவரது தங்கை பார்த்திருந்தால் “என் அண்ணனை அடிக்காதீர்கள்” என்று கதறியிருப்பார். அந்தக் கதறலை யார் கேட்பார்கள்? அந்தக் கண்ணீருக்கு யார் பதில் சொல்வார்கள்?

இந்தப் போராட்டம் ஒரு குடும்பத்திற்கான போராட்டமல்ல. ஒவ்வொரு மாற்றுத்திறனாளியின் உயிருக்கும் மரியாதை வேண்டும் என்பதற்கான போராட்டம்.

இன்று சிலருக்கு மாற்றுத்திறனாளிகள் என்றால் பல வீனமானவர்கள் என்று தோன்றலாம். ஆனால் நினைவில் கொள்ளுங்கள்; எங்கள் உடலில் குறை இருக்கலாம், எங்கள் மன உறுதியில் ஊனம் இல்லை. எங்களை மிரட்டலாம்; மௌனப்படுத்த முடியாது. எங்களை ஒடுக்க முயற்சிக்கலாம்; எங்கள் உரிமைக் குரலை அடக்க முடியாது. கடந்த ஆட்சியில் திராவிட முன்னேற்ற கழகம், மாற்றுத்திறனாளிகளுக்காக பல முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. ஆயிரக்கணக்கான மின்சார சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகள் சுதந்திரமாகச் செல்லும் வகையில் பல்வேறு உதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவை வெறும் நலத்திட்டங்கள் அல்ல; மனிதர்களின் சுயமரியாதையை மீட்டெடுக்கும் முயற்சிகள்.

ஆனால், ஒரு மாற்றுத்திறனாளியின் உயிருக்கு மதிப்பு இல்லாத நிலை உருவாகிவிட்டால், அந்த நலத் திட்டங்களின் அர்த்தமே கேள்விக்குறியாகிவிடும்.

**சபரிவர்மன் மரணத்திற்கு வெளிப்படையான விசாரணை தேவை!**

எனவே, சபரிவர்மனின் மரணத்திற்கு முழுமையான, வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அதுவே நீதிக்கும், மனிதநேயத்திற்கும் உரிய பதிலாக இருக்கும்.

இன்று நாம் கேட்பது பழிவாங்கலை அல்ல; நீதியை. கோபத்தை அல்ல; மனிதநேயத்தை. இரக்கத்தை அல்ல; உரிமையை.

அன்பிற்குரிய தோழர்களே,

மாற்றுத்திறனாளிகளின் உரிமை என்பது பரிதாபத்தின் அடிப்படையில் வழங்கப்படும் சலுகை அல்ல. அது இந்திய அரசியலமைப்பும், மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டமும் உறுதி செய்துள்ள அடிப்படை மனித உரிமையாகும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான நான்கு சதவீத இட ஒதுக்கீடு என்பது வெறும் தேர்தல் வாக்குறுதியாக பேசப்படும் ஒரு சொல் அல்ல. அதற்குப் பின்னால் சட்டமும், நிர்வாகமும், பணியிட அடையாளப்படுத்தலும், சம வாய்ப்பும் இருக்கின்றன. அந்த அமைப்பைப் புரிந்து கொள்ளாமல் “நாங்கள் நடைமுறைப்படுத்துவோம்” என்று திரு விஜய் அவர்கள் கூறுவது போதாது; அதன் ஆழத்தையும் பொறுப்பையும் உணர வேண்டும்.

உள்ளபடியே மாற்றுத்திறனாளிகளின் துறையை திரு விஜய் அவர்கள் வைத்திருக்க தகுதியற்றவராய் இருக்கிறார். ஏனென்றால் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய துறைகளும், சட்டத்தை அமல்படுத்த வேண்டிய அமைப்புகளும், மனித நேயத்துடன் செயல்பட வேண்டிய பொறுப்பு உடையவை. குறிப்பாக, காவல்துறையினர் மாற்றுத்திறனாளிகளை கையாளும் போது கூடுதல் பொறுப்பும், கூடுதல் உணர்வும் கொண்டிருக்க வேண்டும். அது சட்டத்தின் கட்டாயமும், மனிதநேயத்தின் அடையாளமும் ஆகும்.

சபரிவர்மனின் மரணம் குறித்து முழுமையான உண்மைகள் வெளிவர வேண்டும். அவரது குடும்பத்திற்கு உரிய நீதி கிடைக்க வேண்டும். அவரது மனைவிக்கு அரசு வேலை வழங்கி வாழ்வாதார பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். அவரது தாயிடம் அரசு ஆறுதல் தெரிவிக்க வேண்டும். இவை எங்களின் கோரிக்கைகள் மட்டுமல்ல; மனித நேயத்தின் குரல்.

பத்திரிகை நண்பர்களே,

இந்தப் போராட்டத்தை ஒரு நாள் செய்தியாக மட்டும் பார்க்க வேண்டாம். இது ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை, பாதுகாப்பு, மரியாதை மற்றும் உரிமை பற்றிய கேள்வியாகும். இந்தக் குரலை மக்களிடம் கொண்டு சேர்ப்பது உங்கள் சமூகப் பொறுப்பாகும்.

**நீதிக்காகப் போராடத் தயார்!**

என் அன்பு மாற்றுத்திறனாளித் தோழர்களே,

இன்று இங்கே நாம் எழுப்பிய குரல் இந்த மேடையோடு முடிவடையாது. இனி ஒரு மாற்றுத்திறனாளிக்கு அநீதி நடந்தால், அவர் தனியாக நிற்க வேண்டியதில்லை. அவருக்குப் பின்னால் ஒரு இயக்கம் இருக்கிறது; திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாற்றுத்திறனாளிகள் அணி இருக்கிறது; நீதிக்காக போராடத் தயாரான ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் இருக்கிறார்கள்.

இன்று நாம் சபரிவர்மனுக்காக குரல் கொடுக்கிறோம். ஆனால் உண்மையில், நாளை எந்த மாற்றுத்திறனாளியும் இப்படிப்பட்ட கொடுமைக்கு ஆளாகக் கூடாது என்பதற்காகத்தான் இந்தக் குரல்.

ஒரு மாற்றுத்திறனாளியின் உயிர் மலிவானதல்ல. ஒரு மாற்றுத்திறனாளியின் கண்ணீர் யாருக்கும் தெரியாமல் போகாது. ஒரு மாற்றுத்திறனாளியின் உரிமை யாருடைய தயவாலும் வழங்கப்படுவது அல்ல; அது இந்த நாட்டின் சட்டம் உறுதி செய்த உரிமை.

சபரிவர்மனுக்கு நீதி கிடைக்கும் வரை நாங்கள் ஓயமாட்டோம். மாற்றுத்திறனாளிகளின் பாதுகாப்பும், மரியாதையும் உறுதி செய்யப்படும் வரை எங்கள் போராட்டம் தொடரும்.

எங்கள் கைகள் பலவீனமாக இருக்கலாம்; ஆனால் எங்கள் குரல் பலவீனமல்ல.

எங்கள் கால்கள் மெதுவாக நடக்கலாம்; ஆனால் நீதியை நோக்கிய எங்கள் பயணம் ஒருபோதும் நின்றுவிடாது.

எங்கள் உடலில் ஊனம் இருக்கலாம்; ஆனால் எங்கள் உள்ளத்தில் உறுதியும் தன்னம்பிக்கையும் நீதிக்கான தாகமும் நிறைந்திருக்கிறது.

சபரிவர்மனுக்கு நீதி கிடைக்கும் வரை எங்கள் குரல் ஓயாது.

மாற்றுத்திறனாளிகளின் மரியாதை காக்கப்படும் வரை எங்கள் போராட்டம் நிற்காது.

நீதி வெல்லும். மனிதநேயம் வெல்லும். மாற்றுத்திறனாளிகளின் உரிமை வெல்லும்.

இவ்வாறு அக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் போராசிரியர் டி.எம்.என். தீபக் குறிப்பிட்டார்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மாற்றுத்திறனாளிகள் அணியின் மாநில துணைச் செயலாளர்கள் கருணாகரன், எழிலன், வசந்தம் ஜெயராமன், வேங்கை வெங்கடேஷ், அம்பாள் குமார், ராஜ்குமார், ராதிகா உள்பட அவ்வணியின் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.